மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கேள்வி கிராமப் புறத்தில் ஒழுக்கக் கண்காணிப்பு குழு அமைப்பதைப் பற்றியதாகும். நகரங்களில் ஒழுக்கப் பணியைப் பாதுகாக்க வேறு வசதிகள் இருக்கின்றன.

Teachers Training.

*43 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to restrict the admission in training schools in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1972–73-ம் ஆண்டிற்கு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், முதல் வருடப் பிரிவுகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

*44 வினா—திரு. பி. எஸ். மணியன் : கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், துவக்குவதற்கு அனுமதி கொடுப்பது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புதியதாகப் பயிற்சி நிறுவனங்களைத் துவக்குவதற்கு தற்சமயம் அவசியம் இல்லையாதலால் அனுமதி அளிக்கப்படுவது இல்லை.

திரு பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சி தேறியவர்கள் அனைவருக்குமே வேலை கொடுக்கும் வரை இந்தப் பயிற்சி வகுப்புகள் துவக்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது எத்தனை காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆண்டு மட்டும் தான் (அதாவது 1972–73) முதல் வகுப்பிலே பயிற்சி மாணவர்கள் சேர்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எந்த முறை கையாளப்பட வேண்டுமென்று இனிமேல்தான் கவனிக்க வேண்டும். சில பயிற்சிப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றினால் நல்லது என்று யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில பயிற்சிப் பள்ளிகளை ஒன்றோடொன்று இணைப்பதும் நல்லது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது பற்றி கலந்து ஆலோசித்து தக்கதொரு முடிவு எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, admission to Secondary Training Schools have been stopped this year in our State. May I know from the Hon. Minister for Education whether there will be admissions to these schools at least from next year ?

1972 டிசம்பர் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைத்தான் நான் அப்போதே குறிப்பிட்டேன். மறுபடியும் அடுத்த ஆண்டு எந்த அளவுக்கு அதைச் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 6,500 ஆசிரியர்களுக்கு வேலை தந்தபோதும் கூட, கிட்டத்தட்ட 18,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு எந்த அளவுக்கு வேலை தேடித்தர முடியும் என்பதற்கும் திட்டம் தீட்டவேண்டி யிருக்கிறது. இந்த ஆண்டு முதல் ஆண்டுப் படிப்பு இல்லாவிட்டாலும் இரண்டாவது ஆண்டு படிப்பு இருப்பதால் அங்கேயுள்ள பயிற்சி ஆசிரியர் களுக்கு வேலையிருந்துகொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டும் அனுமதி இல்லையென்று ஆகிவிட்டால், அந்தப் பள்ளிகளில் மாணவர்கள் இல்லாமல் ஆகிவிடுமாதலால் வகுப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாமா, பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாமா என்பதைப்பற்றி அந்தத் துறை ஆராய்ந்து வருகிறது. அது பற்றிய முடிவு சில பல திங்களில் எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்போது இளநிலை ஆசிரியர்கள், நடு நிலை ஆசிரியர்கள் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : புள்ளி விவரங்களைப் பற்றி இதிலே எப்படிச் சொல்ல முடியும் ?.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, பயிற்சி தரும் ஸ்தாபனங்கள் தனியாரால் நடத்தப்படுவதால் அவர்கள் ஒரு சமூகத்தினருக்கே அதிக சலுகை தருகிறார்கள் என்று சொல்லப் படுகிறது. ஆகையால் அவற்றை நடத்துவதற்கு நகராட்சிகளுக்கு அனுமதி கொடுக்க அரசு உடனடியாக முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புதிதாக அனுமதி இப்போது வழங்கப்படுவது இல்லை. மாணவர்கள் சேர்ப்பதும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட சமூகத்தினருக்கு என்று எந்தச் சமூகத்தினருக்கும் சலுகை காட்டப்படுவது இல்லை. அப்படிப்பட்ட அனுமதி யார் யார் கோருகிறார்களோ அவர்களுக்கு வசதி வாய்ப்புப்படி தரப்படுகிறது. அதற்கு முன்பு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது எந்தப் பள்ளிகளுக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை.

திரு. கோ. செபமாலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பயிற்சி முடித்து இதுவரையில் எவ்வளவு ஆசிரியர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வேலையில் அமர்த்தப்படாத ஆசிரி யர்கள் எவ்வளவு பேர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆண்டில் 1972–73ல் சுமார் 6,200 ஆசிரியர்களுக்கு வேலைகள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருந்ததற்குப் பின்கூட, 16,000 சொச்சம் ஆசிரியர் கள் வேலையில்லாமல் இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. படிப்படியாக இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள் இதைக் குறைப்பதற்கான வழி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

திரு. க. மு. இராசகோபால் : தனியார் பள்ளி சரியான இடம் இல்லாமல் இருந்தால் எடுத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். காஞ்சீபுரத்தில் வெப்பேடு என்ற இடத்தில் ஒரு தனியார் பள்ளி இருக்கிறது. அதற்கு சரியான இடம் இல்லை. மரத்தடியில் தான் மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மரத்தையும் இப்பொழுது வெட்டிவிட்டார்கள். போதுமான இடம் இல்லாததால் அதை அரசாங்கம் ஏற்று நடத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி தனியாக கவனிக்கப்பட வேண்டும்.

ஐந்தாண்டு பட்டப்படிப்பு.

*45 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கல்லூரிகளில் நான்கு ஆண்டு பட்டப் படிப்பினை ஐந்தாண்டாக மாற்றவேண்டுமென துணை வேந்தர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனரா ?

(இ) அது குறித்து அரசு என்ன கருத்து தெரிவித்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மட்டும் இந்த கருத்தைத் தெரிவித்துள்ளார்.

(இ) இது இன்னும் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. என். கிட்டப்பா : இந்த 4 ஆண்டு பட்டப்படிப்பை, 5 ஆண்டு பட்டப் படிப்பாக ஆக்குவதினுல் ஏற்பட இருக்கிற சாதகங்களை அரசு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி கவனித்து அறிக்கை தருவதற்கு அமைக்கப்பட்டிருக்கிற திட்டக் குழுவைச் சேர்ந்தவர்கள் அறிக்கை தந்திருக்கிறுர்கள். பள்ளிப் படிப்பு 10 ஆண்டு வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் இரண்டு ஆண்டு வரையில் இண்டர்மீடியட், மேலும் 3 ஆண்டு பட்டப் படிப்பு வைத்துக்கொள்ளலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறுர்கள். பல்வேறு கல்வி நிபுணர்களை வைத்துக்கொண்டு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பல பல்கலைக்கழகத் துணை வேந்தர்களையும் கலந்துகொண்டு தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

திரு. கே. கந்தசாமி : இன்று நாட்டில் அதிகமாக பட்டப் படிப்புகள் கலைத்துறையில் படித்து இருந்தும், வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக வளர்ந்து வருகிற காரணத்தினுல், இந்த ஐந்தாண்டு கோர்ஸ் வரையிலே உள்ள நிலையைப் பார்க்கிறபொழுது, அதைத் தொழில் நுணுக்க கல்வித்